**இராசிபுரம் நகராட்சி தனி அலுவலர் அவர்களால் 25.06.2020–ஆம் தேதி முற்பகல் 11.00 மணிக்கு அவசரக் கூட்டத்தில் நடைபெற உள்ள கூட்ட நடவடிக்கைகள்.**

இராசிபுரம் நகராட்சி,
நாள் : 25.06.2020

தனி அலுவலர்,
இராசிபுரம் நகராட்சி

<u>பொருள்கள்</u>

( 1 ) இராசிபுரம் நகராட்சி வார்டு எண். 6 வடக்கு காலனியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2017–18–இன்கீழ் பேவர் பிளாக் சாலை அமைக்கும் ரூ. 11,00,000/– மதிப்பீட்டுப் பணிக்கு 17.06.2020–இல் பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் வருமாறு.

1) திரு டி. மணிகண்டன், ஒப்பந்ததாரர்,
2/479, சேரன் தொழிலாளர் காலனி, திருப்பூர் – மதிப்பீட்டைவிட 0.03 % குறைவு.
2) திரு என். செல்லப்பன், ஒப்பந்ததாரர்,
27, வி. நகர் ரோடு எண். 17, இராசிபுரம் – மதிப்பீட்டைவிட 0.03 % அதிகம்.

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.03 % குறைவான திரு டி. மணிகண்டன், ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் 0.03 % குறைவான திரு டி. மணிகண்டன், ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(இ1/1097/20)

**தீர்மானம் எண். 822**

அனுமதிக்கப்பட்டது.

( 2 ) இராசிபுரம் நகராட்சி வார்டு எண். 6 வடக்கு காலனியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2017–18–இன்கீழ் நீர்த்தேக்க மின் மோட்டார் அறை அமைத்து தண்ணீர் வசதி செய்யும் ரூ. 7,00,000/– மதிப்பீட்டுப் பணிக்கு 17.06.2020–இல் பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் வருமாறு.

1) திரு டி. மணிகண்டன், ஒப்பந்ததாரர்,
2/479, சேரன் தொழிலாளர் காலனி, திருப்பூர் – மதிப்பீட்டைவிட 0.03 % குறைவு.
2) திரு என். செல்லப்பன், ஒப்பந்ததாரர்,
27, வி. நகர் ரோடு எண். 17, இராசிபுரம் – மதிப்பீட்டைவிட 0.79 % அதிகம்.

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.03 % குறைவான திரு டி. மணிகண்டன், ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் 0.03 % குறைவான திரு டி. மணிகண்டன், ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(இ1/1097/20)

**தீர்மானம் எண். 823**

அனுமதிக்கப்பட்டது.

( 3 ) இராசிபுரம் நகராட்சி வார்டு எண். 22 காமராஜ் காலனியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2017–18–இன்கீழ் கழிப்பிடத்திற்கு ஆழ்துளைக் கிணறு மற்றும் பகிர்மானக் குழாயமைத்து தண்ணீர் வசதி செய்யும் ரூ. 4,00,000/– மதிப்பீட்டுப் பணிக்கு 17.06.2020–இல் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் வருமாறு.

1) திரு ஆர். பிரகாசம், ஒப்பந்ததாரர்,
மசக்காளிப்பட்டி அஞ்சல், இராசிபுரம் – மதிப்பீட்டைவிட 0.02 % குறைவு.
2) திரு என். செல்லப்பன், ஒப்பந்ததாரர்,
27, வி. நகர் ரோடு எண். 17, இராசிபுரம் – மதிப்பீட்டைவிட 0.32 % அதிகம்.

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.02 % குறைவான திரு ஆர். பிரகாசம், ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணியினை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் 0.02 % குறைவான திரு ஆர். பிரகாசம், ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(இ1/1170/20)

**தீர்மானம் எண். 824**

அனுமதிக்கப்பட்டது.

( 4 ) இராசிபுரம் நகராட்சி அம்மா உணவகத்தில் நடைபெற்று வரும் பணிகளை கண்காணிக்க டோக்கன் வழங்குமிடம், பொருட்கள் வைப்பறை, உணவுக்கூடம் மற்றும் நுழைவாயில் பகுதிகளில் கண்காணிப்பு காமரா பொருத்தி கட்டுப்பாட்டு அமைப்பு மற்றும் பொறியாளர், ஆணையாளர் அறைகளிலிருந்து கண்காணிப்பு அமைப்பு ஏற்படுத்த பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் விவரங்கள் வருமாறு.

| | | | |
|---|---|---|---|
| 1) | Spyder Technology, Salem | - | Rs. 47,450/- |
| 2) | Venus Tech, Salem | - | Rs. 52,100/- |
| 3) | Raj Computers, Salem | - | Rs. 51,400/- |

குறைவான விலைப்புள்ளியினை வழங்கியுள்ள Spyder Technology நிறுவனத்தின் மூலம் பணிகளை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** அ) குறைவான விலைப்புள்ளியினை வழங்கியுள்ள Spyder Technology நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்கலாம்.
ஆ) செலவினத்தை அம்மா உணவக நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(இ1/1528/20)

**தீர்மானம் எண். 825**

அனுமதிக்கப்பட்டது.

( 5 ) இராசிபுரம் நகராட்சி பகுதியிலுள்ள அம்மா உணவகத்தின் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள ரூ. 3,00,000/– மதிப்பீட்டில் 19.06.2020 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் வருமாறு.

1) திரு ஆர். எஸ். இரங்கசாமி, ஒப்பந்ததாரர், இராசிபுரம் – மதிப்பீட்டைவிட 0.07 % குறைவு.
2) திரு ஏ. மதியழகன், ஒப்பந்ததாரர், இராசிபுரம் – மதிப்பீட்டைவிட 2.78 % அதிகம்.

மதிப்பீட்டைவிட 0.07 % குறைவான திரு ஆர். எஸ். இரங்கசாமி ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி மேற்கொள்ளவும், செலவினத்தை குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** அ) மதிப்பீட்டைவிட 0.07 % குறைவான திரு ஆர். எஸ். இரங்கசாமி ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.
ஆ) செலவினத்தை நகராட்சி குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(இ2/961/20)

**தீர்மானம் எண். 826**

அனுமதிக்கப்பட்டது.

( 6 ) இராசிபுரம் நகராட்சி வார்டு எண். 1 முதல் 27 வரை புதியதாக ஆறு நீர்முழ்கி மின் மோட்டார்கள் வாங்க ரூ. 3,80,000/– மதிப்பீட்டுப் பணிக்கு 19.06.2020 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் வருமாறு.

1) திரு ஆர். எஸ். இரங்கசாமி, ஒப்பந்ததாரர், இராசிபுரம் – மதிப்பீட்டைவிட 0.12 % குறைவு.
2) திரு ஏ. மதியழகன், ஒப்பந்ததாரர், இராசிபுரம் – மதிப்பீட்டைவிட 1.63 % அதிகம்.

மதிப்பீட்டைவிட 0.12 % குறைவான திரு ஆர். எஸ். இரங்கசாமி ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி மேற்கொள்ளவும், செலவினத்தை நகராட்சி குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** அ) மதிப்பீட்டைவிட 0.12 % குறைவான திரு ஆர். எஸ். இரங்கசாமி ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.
ஆ) செலவினத்தை நகராட்சி குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(இ2/1133/20)

**தீர்மானம் எண். 827**

அனுமதிக்கப்பட்டது.

( 7 ) இராசிபுரம் நகராட்சிக்குச் சொந்தமான ஈப்பு வாகனம் TN 28 AT 4555–இல் உள்ள பழைய டயர்களுக்கு பதிலாக புதிய டயர்கள் வாங்கி பொருத்தும் பணிக்கு SKS ஆட்டோ மொபைல்ஸ், நாமக்கல்–இல் இருந்துவிலைப்புள்ளி வரப்பெற்றுள்ளது. புதிய டயர்கள் வாங்க ஆகும் செலவினம் ரூ. 30259/–ஐ குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(இ2/1205/20)

**தீர்மானம் எண். 828**

அனுமதிக்கப்பட்டது.

(8) இராசிபுரம் நகராட்சிப் பகுதிகளில் சுற்றித்திரியும் தெரு நாய்களை பிடித்து கருத்தடை அறுவை சிகிச்சை செய்யும் பணிகள் மற்றும் ARV தடுப்பூசி போடும் பணிக்கு கடந்த 18.06.2020 அன்று இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. அவற்றின் விவரம் பின்வருமாறு.

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | ஒரு தெரு நாய்க்கு அறுவை சிகிச்சை செய்தல் மற்றும் தடுப்பூசி போட கட்டணம் |
|---|---|---|
| 1) | Voice for Animals Charitable Trust, Chennai – 07 | ரூ. 700/– |
| 2) | Heart to Heart Vet Foundation, Chennai – 119 | ரூ. 750/– |

வ.எண். 1–இல் குறிப்பிட்டுள்ள நிறுவனத்தினர் குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ளதால், Voice for Animals Charitable Trust, Chennai என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட செலவினங்களை வருவாய் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(இ2/1205/20)

**தீர்மானம் எண். 829**

அனுமதிக்கப்பட்டது.

(9) இராசிபுரம் நகராட்சிப் பகுதிகளில் கொரோனா வைரஸ் (கோவிட்–19) நோய் நகர பொது மக்களுக்கு பரவாமல் தடுக்கவும், மேலும், கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கைக்கு முக கவசம், தெர்மல் ஸ்கேனர், பல்ஸ் ஆக்ஸிமீட்டர், விளம்பர பணிக்கு தேவைப்படும் பென் டிரைவ் ஆகிய பொருட்கள் தேவைப்படுவதால், அவற்றை வாங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ. 2.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட செலவினங்களை நகராட்சி வருவாய் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் கோவிட்–19 SDRF நிதி கிடைக்கும் பட்சத்தில், இந்நிதியிலிருந்து ஈடு செய்து கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(எச்1/1637/20)

**தீர்மானம் எண். 830**

அனுமதிக்கப்பட்டது.

(10) இராசிபுரம் நகராட்சியில் நடைபெறும் கொரோனா வைரஸ் (கோவிட்–19) நோய் தடுப்பு பணிக்கு 3 லேயர் முக கவசம், கையுறை (காட்டன்), சானிடைசர் (பாட்டில் ஸ்பிரே) லைசால் மற்றும் பிளிச்சிங்பவுடர் ஆகியவை தேவைப்படுவதால், அவற்றை வாங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ. 2.70 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்கண்ட செலவினங்களை நகராட்சி வருவாய் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் கோவிட்–19 SDRF நிதி கிடைக்கப்பெறின், அந்த நிதியிலிருந்து ஈடு செய்து கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(எச்1/1780/20)

**தீர்மானம் எண். 831**

அனுமதிக்கப்பட்டது.

( 11 ) இராசிபுரம் நகராட்சிப் பகுதிகளில் கொரோனா வைரஸ் (கோவிட்–19) நோய் நகர பொது மக்களுக்கு பரவாமல் தடுக்கும் பொருட்டு, கொரோனா நோய் தடுப்பு பணியில் கிருமி நாசினி மருந்து தெளிக்க ECO clean – 50 plus மருந்து – 40 லிட்டர் தேவைப்படுவதால், அவற்றை வாங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ. 1.20 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : 1)** மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட செலவினங்களை நகராட்சி வருவாய் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் கோவிட்–19 SDRF நிதி கிடைக்கப்பெறின், அந்நிதியிலிருந்து ஈடு செய்து கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(எச்1/1785/20)

**தீர்மானம் எண். 832**

அனுமதிக்கப்பட்டது.

( 12 ) இராசிபுரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் டம்பர் பின் லாரி பதிவு எண். TN 28 AT 8969 என்ற வாகனத்திற்கு புதியதாக 6 டயர், 6 டியூப் மற்றும் 6 பிளாட்கள் வாங்கும் பணிக்கு கடந்த 22.06.2020 அன்று மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அவற்றின் விவரம் பின்வருமாறு.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | 6 டயர், 6 டியூப் மற்றும் 6 பிளாப்களின் விலை |
|---|---|---|
| 1) | ஸ்ரீ முருகன் டயர்ஸ், சேலம் – 10 | ரூ. 62100/– |
| 2) | லட்சுமி டிரேடர்ஸ், சேலம் – 10 | ரூ. 62610/– |
| 3) | தங்கம் டயர்ஸ், நாமக்கல் | ரூ. 64100/– |

வ.எண். 1–இல் குறிப்பிட்டுள்ள நிறுவனத்தினர் குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ளதால், ஸ்ரீ முருகன் டயர்ஸ், சேலம் – 10 என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : 1)** மன்றம் அனுமதிக்கலாம்.
2) அவசர அவசியத்தை முன்னிட்டும், பொது சுகாதார நலன் கருதியும், நகர்மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி, தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று, விநியோக ஆணையும், அதற்கான தொகை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(எச்1/1788/20)

**தீர்மானம் எண். 833**

அனுமதிக்கப்பட்டது.

( 13 ) இராசிபுரம் நகராட்சி வார்டு எண். 17, சுப்பராய தெரு வழியாக செல்லும் குடிநீர் விநியோக 200 mm சுலீஸ் வால்வு செக் நட் பழுது சரிசெய்ய 22.06.2020 அன்று பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் விவரம் பின்வருமாறு.

| வ.எண். | உரிமையாளர் பெயர் | தொகை |
|---|---|---|
| 1) | திரு எ. சுப்ரமணி, 40, குமாரசாமி தெரு, இராசிபுரம் | ரூ. 6900/– |
| 2) | திரு ஆர். ராஜா, குமாரசாமி தெரு, இராசிபுரம் | ரூ. 6750/– |
| 3) | திரு ஆர்.எஸ். ரங்கசாமி, 25எ, எம்.ஜி.ஆர். நகர், காட்டூர் | ரூ. 6500/– |

பெறப்பட்ட விலைப்புள்ளிகளில், திரு ஆர்.எஸ். ரங்கசாமி அவர்கள் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ளதால், திரு ஆர்.எஸ். ரங்கசாமி அவர்களின் விலைப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** 1) மன்றம் திரு ஆர்.எஸ். ரங்கசாமியின் விலைப்புள்ளியை அனுமதிக்கலாம்.
2) இப்பணியின் செலவினத்தை குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(இ2/1529/20)

**தீர்மானம் எண். 834**

அனுமதிக்கப்பட்டது.

( 14 ) இராசிபுரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு பிறப்பு, இறப்பு பதிவுகள் 8768 பதிவுகளை கணினியில் (on-line) பதிவேற்றம் செய்ய வேண்டியிருப்பதால், அதற்கான உத்தேச செலவினம் ரூ. 2.20 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட செலவினங்களை நகராட்சி வருவாய் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(எச்1/1886/20)

**தீர்மானம் எண். 835**

அனுமதிக்கப்பட்டது.

( 15 ) இராசிபுரம் நகராட்சி முத்துக்காளிப்பட்டி எரிவாயு தகனமேடையினை இயக்கவும், பராமரிக்கவும் ராசி ரோட்டரி பவுன்டேசன் டிரஸ்ட் அறக்கட்டளைக்கு, நகராட்சி ந.க.எண். இ1/3124/2016, நாள் 07.06.2017-இல் ஆணை வழங்கப்பட்டுள்ளது. தகனமேடையினை இயக்கவும், பராமரிக்கவும் ஒப்பந்த காலம் மூன்றாண்டு நிறைவடைவதால், மீண்டும் ஒப்பந்தத்தினை புதுப்பித்து வழங்குமாறு அறக்கட்டளையினர் கோரியுள்ளனர்.

ராசி ரோட்டரி பவுன்டேசன் டிரஸ்ட் அறக்கட்டளையின் 12.06.2020 தேதிய கடிதத்தில், மின் கட்டண உயர்வு, எரிவாயு உருளை விலை உயர்வு மற்றும் பணியாட்களின் ஊதிய உயர்வு ஆகியவைகளின் காரணமாக எரியூட்டப்படும் சடலம் ஒன்றிற்கு ரூ. 4000/– வீதம் உயர்த்தி வழங்க கோரப்பட்டுள்ளது. அதன்படி, இராசிபுரம் நகராட்சி நிர்வாகம் மற்றும் அறக்கட்டளை நிர்வாகிகள் ஆகியோர்களது 22.06.2020 தேதிய கலந்தாய்வுக் கூட்டத்தில், எரிவாயு தகனமேடையினை இயக்கவும், பராமரிக்கவும் எரியூட்டப்படும் சடலம் ஒன்றிற்கு ரூ. 3000/– மட்டுமே வசூலிக்கப்பட வேண்டும் எனவும், அவ்வாறு வசூலிக்கப்படும் தொகையில் ஒவ்வொரு மாதமும் 10–ஆம் தேதிக்குள் நகராட்சிக்கு செலுத்த வேண்டிய தொகை எரியூட்டப்படும் சடலம் ஒன்றிற்கு ரூ. 100/– வீதம் செலுத்தப்பட வேண்டுமென முடிவெடுக்கப்பட்டது.

எனவே, அரசாணை எண் : 228, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி 3) துறை, நாள் : 13.11.2008–இல் தெரிவித்துள்ளவாறு ஏற்கனவே நடைமுறையிலுள்ள நிபந்தனைகளின்படி, முத்துக்காளிப்பட்டி எரிவாயு தகனமேடையினை இயக்கவும்,

பராமரிக்கவும் மூன்றாண்டுகளுக்கு ராசி ரோட்டரி பவுன்டேசன் டிரஸ்ட் அறக்கட்டளைக்கு ஒப்பந்தத்தினை புதுப்பித்து வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அரசாணை எண் : 228, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி 3) துறை, நாள் : 13.11.2008–இல் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளின்படியும், இராசிபுரம் நகராட்சி நிர்வாகம் மற்றும் அறக்கட்டளை நிர்வாகிகள் ஆகியோர்களது 22.06.2020 தேதிய கலந்தாய்வுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளின்படியும் சடலம் ஒன்றிற்கு ரூ. 3000/– மட்டுமே வசூலிக்கப்பட வேண்டும் எனவும், அவ்வாறு வசூலிக்கப்படும் தொகையில் ஒவ்வொரு மாதமும் 10–ஆம் தேதிக்குள் நகராட்சிக்குச் செலுத்தவேண்டிய தொகை எரியூட்டப்படும் சடலம் ஒன்றிற்கு ரூ. 100/– வீதம் செலுத்தப்பட வேண்டும் என்ற நிபந்தனைகளின்படி முத்துக்காளிப்பட்டி எரிவாயு தகனமேடையினை இயக்கவும், பராமரிக்கவும் மேலும் மூன்றாண்டுகளுக்கு ராசி ரோட்டரி பவுன்டேசன் டிரஸ்ட் அறக்கட்டளைக்கு ஒப்பந்தத்தினை புதுப்பித்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(இ1/3124/16)

**தீர்மானம் எண். 836**

அனுமதிக்கப்பட்டது.

( 16 ) இராசிபுரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் BoV வாகனத்தில் 8 வாகனங்களுக்கு பேட்டரி பழுதடைந்துள்ளது. ஒவ்வொரு வாகனத்திற்கும் தலா 5 பேட்டரிகள் வீதம் மொத்தம் 8 வாகனத்திற்கு 40 பேட்டரிகள் புதியதாக வாங்கவும், மேலும், 2 மின் மோட்டார் மற்றும் இதர பழுதடைந்த பாகங்களை புதியதாக வாங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ. 3.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : 1)** மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட செலவினங்களை நகராட்சி வருவாய் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(எச்1/2258/20)

**தீர்மானம் எண். 837**

அனுமதிக்கப்பட்டது.

ஒம் /– ஆ. குணசீலன்,
தனி அலுவலர்.

/ உண்மை நகல் /

ஆணையாளர்(கூ.பொ.),
இராசிபுரம் நகராட்சி.